**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2020**

---

கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557/2558 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆவது உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை கொழும்பு மாநகர பகுதிக்குள் வேலைகளை அமுலாக்குவதற்காக பொறுப்பாகவுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கொலன்னாவை நகர சபை மற்றும் தெகிவளை/ கல்கிசை மாநகர சபை பகுதிக்குள் வேலைகளை அமுலாக்குவதற்காக பொறுப்பாகவுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான என்னுடைய அவதானிப்புக்களை இந்த அறிக்கை கொண்டுள்ளது. கழிவு நீர் முகாமைத்துவ சேவைகள் ஊடாக கொழும்பு பெரும்பாகத்தில் நகர மற்றும் புறநகர்களில் வசிக்கின்றறோருக்கான நகர சுற்றாடல் மற்றும் பொது மக்கள் சுகாதாரத்தை முன்னேற்றுவதே செயயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. செயற்திட்ட பகுதிக்குள் ஏறத்தாழ 645,000 வசிக்கின்றவர்களிற்கு கழிவு நீர் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,410 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 116.60 மில்லியன் ஆக உள்ளது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 1,731.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.60 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,367.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.40 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதித் தொகை ரூபா 364.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 திசெம்பர் 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2017 மார்ச் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2020 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை.

பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 72.19 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட கணக்கீட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம், செயற்திட்டம் மூலதனமாக்கல் செய்யப்படும் போது 2020 திசெம்பர் 31 வரை பெறுமதி சேர் வரி அரசாங்க நிதிக்கு எதிராக சரி செய்யப்படுவதற்கு | மொத்த அரசாங்க பங்களிப்பு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கியானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் கொழும்பு மாநகர சபையால் அமுலாக்கப்பட்ட இரண்டு செயற்திட்டங்களிற்காக ஒரே கடன் வசதியை வழங்கியிருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி 2020 திசெம்பர் 31 வரை ரூபா 162 மில்லியன் தொகையான கடன் வட்டியை சாட்டுதல் செய்திருந்தது. எவ்வாறாயினும், தனித்தனியாக செயற்திட்டம் மீதான வட்டியை அடையாளம் காண்பதற்கு வேண்டப்பட்ட தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட வட்டி கட்டணம் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதற்கான தெளிவான கணக்கீட்டு அறிவுறுத்தல்கள் 2021 இல் வழங்கப்பட்டதுடன் அந்நேரத்தில் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றில் மொத்த கைதவிர்ப்புகளும் காட்டப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான நேரடிக் கொடுப்பனவுகள் ரூபா 1,325 மில்லியனாக இருந்தது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இறுதி விலைப்பட்டியல் பெறுமதி மற்றும் வற் கொடுப்பனவுகள் என்பன மத்திய வங்கி கட்டுநிதி ஊடாக செய்யப்பட்ட கொடுப்பனவுகளை | சரியாக இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். (ADB இடமிருந்தான பங்களிப்பிலிருந்து வற் தீர்ப்பனவு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயிறும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை பிரகாம் இது ரூபா 1,121.23 மில்லியனாக இருந்தது. | ரூபா 1,325 மில்லியன் தொகையான மீதியில் உள்ளடங்குகின்றது. வற் கொடுப்பனவுகளிற்கு விலக்களிப்புகள் பெறுவதறகு முன்னரே செய்யப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மீதி ரூபா 1,121.23 மில்லியன் மற்றும் வித்தியாசம் ரூபா 203.76 மில்லியன் ரூபா 1,325 மில்லியன் நிதிக்கூற்று மீதியுடன் இணக்கப்பட்டதுடன் இணக்கக்கூற்று இணைக்கப்பட்டுள்ளது | ADB அனுமதித்திருக்கவில்லை) |
| (ஈ) | செயற்திட்டமனது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை படம் வரைதல் பிரிவுக்கு ரூபா 2.4 மில்லியன் கிரயத்தில் கணனி மென்பொருளை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும் அந்த தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சொத்து மாற்றமாக புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக ADB பங்களிப்பிற்கு வரவுவைக்கப்பட்டது. | ரூபா 2.4 மில்லியனிற்காக கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் பொதி படம்வரைதல் பிரிவிற்கு மாற்றப்பட்டதுடன் திருத்தப்பட்ட JV இணைக்கப்பட்டுள்ளது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ஐ.அ.டொலர் 556,678 தொகையான இறுதி ஒப்பந்த விலைப்பட்டியல் 2020 திசெம்பர் 31 வரையும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டமானது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக அந்த தொகையை வெளிநாட்டு பங்களின்பு வளத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஐ.அ.டொலர் 556,678 தொகையான இறுதி ஒப்பந்த விலைப்பட்டியல் 2020 இற்கு பதியப்பட்ட பாதீட்டின் முறையான அனுமதி பெற்று 2020 இல் விடுவிக்கப்பட்டது. இல்லையென்றால் நடைமுறைப் பொறுப்புகளிலிருந்து தீர்ப்பதற்கு பாதீட்டு அனுமதி இருக்காது. பாதீட்டு மாற்றல் வேண்டுகை இணைக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந்திகதிய MOFP/ERD/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2021 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும, நிதிக்கூற்றுக்கள் 2021 ஒக்தோபர் 28 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் 2021 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிலவிய கோவிட் நோய்த்தொற்று நிலைமை எங்களுடைய பிரிவு உத்தியோகத்தரைப் பாதித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் இருந்து நாங்கள் நீடிப்பை பெற்றிருந்தோம். | உரிய நேரத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2007 மே 11 ஆந் திகதிய 13/2007 ஆம் இலக்க சபையின் சுற்றறிக்கை பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் பொது முகாமையாளர் (வழங்கல்) இற்கு செயற்திட்டத்தின் மிகுதி சொத்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறித்த வேண்டுகைக்கு முரணாக மிகுதியாக இருக்கின்ற நிலையான சொத்துக்களை சபையின் பல்வேறு பிரிவுக்கு செயற்திட்ட பணிப்பாளர் கையளித்திருந்தார். | செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர், மிகுதி இருப்புகள் பராமரிப்பு தேவைகளிற்காக உரிய நீர் வழங்கல் திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. செயற்திட்ட அலுவலகத்தில் பயன்படுத்திய பொருளிப்பு விடயங்கள் சபைக்குள் தேவைப்பட்ட பிரிவுகளிற்கு மாற்றப்பட்டிருந்தது | செயற்திட்டமானது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கிநடக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

## 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தால் வடிவமைப்பு வேலைகள் முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால் ஒப்பந்தகாரர் ஐ.அ.டொலர் 1,834,639 கிரயத்திலான 37 முரண் கட்டளைகளை சமர்ப்பித்திருந்தார். எவ்வாறாயினும், செயற்திட்டம் அந்த தொகைக்கு உடன்பட்டிருக்காததுடன் 2020 நவம்பர் வரை நடுவர் தீர்ப்பு செயற்பாடுகள் தொடர்ந்திருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நடுவர் தீர்ப்பு செயற்பாடு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் கீழ் காட்டப்பட்வாறு நடுவர் தீர்ப்பாளரால் வழங்கப்பட்ட அறிகை இணைக்கப் பட்டுள்ளதுடன் ஐ.அ.டொலர் 556,678 செலுத்துவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மொத்தக் கிரயத்தினையும் மூலதனமாக்குவதற்கான செயற்பாடு எடுக்கப்பட்டது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்ட நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி இடைக்கால கொடுப்பனவு பட்டியல் நிலுவையாக உள்ள போதிலும் செயற்திட்டமானது சொத்து மூலதனமாக்கல் செயற்பாட்டினை தொடங்கியிருந்தது. | சபையின் பக்க தகவல்களின் பிரகாரம், இறுதிப் பட்டியல் கொடுப்பனவு செய்வதற்கு செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட கிரயமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மொத்த செயற்திட்டக் கிரயத்தினையும் மூலதனமாக்குவதற்கான செயற்பாடு எடுக்கப்பட்டது. | இறுதிப் விலைப்பட்டியல் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் சொத்து மூலதனமாக்கல் தொடங்கப்பட வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலைகள் ரூபா 1,414.26 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைபெறும் வேலைகள் எதுவும் காட்டப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற ரூபா 1,414.26 மில்லியன் நடைபெறும் வேலைகள் செயற்திட்டம் மூலதனமாக்குவதற்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வேண்டுகைப் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட மூலதனமாக்கல் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியான பின்னர் தொடங்கப்பட வேண்டும். |

## 3.3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் செயற்திட்டத்தால் நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டமானது பொருளிப்பு விடயங்கள் பதிவேடு மற்றும் வேறு பிரிவுகளிற்கு மாற்றப்பட்ட மடிக்கணனி என்பவற்றினை பேணியிருந்ததுடன் கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டமானது நிலையான சொத்துப் பதிவேட்டினை பேண வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்காததுடன் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் பதிவேடுகள் உள்ளக கணக்காய்வு பிரிவால் காலத்திற்கு காலம் பரிசோதிக்கப்பட்டது. | உள்ளக கணக்காய்வாளரால் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |